பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 17 வியாழக்கிழமை 31.03.2022 கதிர் 146

### இனி இது ரகசியம் அல்ல!

டீசல் இறக்குமதி தாமதமடைவதால் போக்குவரத்து நிலைமை மோசடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. பல பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. பல இடங்களில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் ☞2

# இன்று 13 மணி நேரம் மின்வெட்டு!



நாட்டில் இன்று 13 மணி நேரம் மின்வெட்டு அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப்பயன்பாடு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது நிலவும் கடும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இலங்கை மின்சாரசபைதெரிவிக்கின்றது.

அனல்மின்நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான டீசல்மற்றும்உலைஎண்ணெய் கையிருப்பில் இல்லாத காரணத்தால் இலங்கை மின்சார சபையால் இந்த மாதம் 5ஆம் திகதி வரை இவ்வாறான மின்வெட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை முதல் 15 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி இன்று A, B, C, D, E, F ஆகிய ☞9

# நாடு இருளில்; மக்களோ வீதியில்; அரசே! கூண்டோடு பதவி விலகு!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 31

நீண்ட நேர மின்தடையால் நாடு இருளில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தாலும் பற்றாக்குறையாலும் மக்கள் வீதிகளில் அலைய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்தநிலையில், இந்த அரசு இனியும் தாமதிக்காமல் கூண்டோடு பதவி விலகவேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார். ☞9

## புதுக்குடியிருப்புப் பிரதேச சபை சாரதி வாகன விபத்தில் மரணம்

### மேலும் மூவர் படுகாயம்



முல்லைத்தீவு, மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டிப் பகுதியில் ஏற்பட்ட விபத்துச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு ☞9

## திடீர் சுகவீனம் காரணமாக யாழில் இளம் பெண் சாவு!

திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். அவரது உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், அவரது உடல்கூற்று மாதிரிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. ☞9

## நெருக்கடியைச் சமாளிக்க நாட்டை முற்றாக முடக்குக!

### கோட்டா அரசிடம் யோசனை

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக, சில நாள்களேனும் நாட்டை முழுமையாக முடக்குமாறு கோட்டாபய அரசிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எரிபொருள் ☞9

## இலங்கைக்கு விரைந்து உதவுவதற்காக ‘ஓவர் டைம்’ வேலை செய்கிறது இந்தியா

### கொழும்பிலிருந்து புறப்பட முன்னர் ஜெய்சங்கர் தெரிவிப்பு



பாரதூரமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முயற்சிக்கும் இலங்கைக்கான உதவிகளை விரைவுபடுத்த இந்திய அமைப்பு மேலதிக நேரமாக (ஓவர் டைம்) ☞9

## இந்திய - இலங்கை கடல்சார் பாதுகாப்பு ஒப்பந்தத்தால் நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கு ஆபத்தும் ஏதுமில்லை!

### விளக்கமளிக்கிறது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு,மார்ச் 31

இந்திய அரசாங்கத்துடன் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட கடல்சார் பாதுகாப்பு உடன்படிக்கைகள் தொடர்பில் சில அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் விடயங்கள் தவறாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. அவை குறிப்பிடுகின்றமை போன்று இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு இடையூறையோ அல்லது அச்சுறுத்தலையோ இந்த உடன்படிக்கை ஏற்படுத்தாது.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த விசேட அறிக்கையில்ர தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞9

EDUS Online School
சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!
English & Tamil Medium
அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.
தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L
Enroll Now
Admissions
www.edus.lk
0777 123 330
அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிகின்றது.

இந்தச் சிக்கல் நேரத்துடனேயே வரலாம் என்று எதிர்பார்த்து அடுத்த சில நாள்களுக்கு ஊழியர்களை வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கு வழி செய்யும் விதத்தில் நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் பரிந்துரை செய்தது பொதுச் சேவைகள் பயன்பாட்டு ஆணைக்குழு. ஆனால் அரசிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

கொரோனாத் தொற்று மோசமான நிலையில் இவ்வாறு பயணத்தடை விதித்து வீட்டிலிருந்து பணியாற்றும் நடவடிக்கை முறை பின்பற்றப்பட்டமை தெரிந்ததே.

போக்குவரத்து நெருக்கடி மோசமடைந்து வருகின்றமையால் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான கோபமும் சீற்றமும் உணர்வலையும் மக்கள் மத்தியில் பெருக்கெடுத்து வருகின்றன. போதாக்குறைக்கு மின்வெட்டு நேரம் பத்து மணித்தியாலங்களைத் தாண்டியிருப்பது மக்களின் எரிச்சலை உச்சத்துக்குக் கொண்டு போய் இருக்கின்றது.

டீஸல் தட்டுப்பாட்டுப் பிரச்சினை நீங்கும் வரை – சில நாள்களுக்காவது – நாட்டை முடக்கி வைத்திருக்கும் அறிவித்தலை விடுத்தால் என்ன என்ற ஒரு யோசனை கூட நேற்று அரச உயர்மட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிய வந்தது.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கிய காலம் போய், டீஸல் இல்லாததால் நாட்டை முடக்கும் நிலைமை வந்திருக்கின்றது. நல்ல வேடிக்கைதான், போங்கள்.

பதுளையில் ஒரு திறப்பு விழாவுக்காக ராஜபக்ஷக்களில் ஒருவர் நேற்று அங்கு மோட்டார் பவனியில் செல்லவிருந்தார். ஆனால், இங்கு வராதீர்கள், மக்கள் கூட்டமாகத் திரண்டு கூக்குரலிடத் திட்டமிட்டிருக்கின்றார்கள் என்று புலனாய்வுத் தரப்பினர் விடுத்த எச்சரிக்கைச் செய்தியை அடுத்து அந்தத் திறப்பு விழாப் பயணத்தை அந்த ராஜபக்ஷ தள்ளிப் போட்டார் அல்லது கைவிட்டார் என உள்வீட்டுத் தகவல் ஒன்று தெரிவித்தது.

தெற்கில் அரசியல் நிலைமை வரவர ராஜபக்ஷக்களுக்கு எதிராக மோசமாகிக் கொண்டிருக்கின்றது என்பதுதான் நிலைமை.

★ ★ ★

சிறுவயதில் 'அம்புலிமாமா'வில் வந்த கதை ஒன்று பலருக்கும் படித்த ஞாபகம் இருக்கும்.

"தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் மரத்திலேறி அதில் தொங்கும் உடலைக் கீழே விழுத்தினான். பின்னர் அதைத் தோளில் சுமந்தவாறு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனின் உள்ளிருந்த வேதாளம் அவனை நோக்கி..." – என்று அந்தக் கதையை வாசித்த நினைவு உண்டு.

சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட கீதநாத் காசிலிங்கம் அந்தக் கூட்டத்தை நடத்தச் செய்வதற்கு மனம் தளர விடாது தொடர்ந்து அழுத்தம் கொடுத்து முயற்சித்து வருகின்றார் என்று தெரிகின்றது.

நீண்ட காலமாக இந்தக் கூட்டம் நடத்தப்படவில்லை. நடத்தப்படாமலேயே நம் அமுல்பேபியின் தர்பார் தன்பாட்டில் எதேச்சாதிகாரமாக நடக்கின்றது என்பது பரகசியம்.

கூட்டம் நடந்தால் பல விடயங்கள் பகிரங்கமாகும் – அம்பலமாகும் – என்பது தெரிந்த சம்சாரம்தான்.

பிரதமரின் பிரதிநிதி கொடுத்த அழுத்தத்தினால் வரும் சனிக்கிழமை (நாளை மறுதினம்) அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு ஆயத்தமானார் மாவட்டச் செயலாளரான அரச அதிபர்.

அந்தத் திகதி தனக்கு சரிவராது என்றார் இணைத் தலைவர்களில் ஒருவரான ஆளுநர். அவரது கோரிக்கையின் பேரில் ஏப்ரல் 09ஆம் திகதி கூட்டத்தை நடத்த அரச அதிபர் தரப்பில் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அந்த நாள் தமக்கு சரிபட்டு வராது என்றார் இணைத் தலைவர்களில் மற்றவரான அங்கஜன் இராமநாதன்.

இரண்டு பேருக்கும் பொருத்தமான ஒரு நாளைத் தேர்வு செய்வதற்காகச் சிண்டைப் பிய்த்துக் கொள்கின்றது யாழ். செயலகத் தரப்பு.

எது, எப்படி என்றாலும் காலத்தை இழுத்தடித்தமை போதும், விரைந்து கூட்டத்தைக் கூட்டுங்கள் என்று அழுத்தம் கொடுக்கின்றார் பிரதமரின் பிரதிநிதி காசிலிங்கம் கீதநாத்.

அடுத்த இன்னொரு அதிரடி நடவடிக்கையையும் அவர் முன்நகர்த்தியிருக்கின்றார்.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் பல நூறு கோடி ரூபா அபிவிருத்தி நிதி புரள்கின்றது. ஆனால் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்தாமல் துக்ளக் தர்பார் – மன்னிக்கவும், அமுல்பேபி தர்பார் – தொடர்கின்றது. பலரின் பைகள் நிறைகின்றன.

இவற்றுக்கு ஆப்பு வைக்கும் விதத்தில் பிரதேச செயலகங்கள் ரீதியாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை எப்போது கூட்டப்போகின்றீர்கள் என்று யாழ்.அரச அதிபருக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார் பிரதமரின் பிரதிநிதி.

பிரதேச செயலகங்கள் ரீதியாக பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை நடத்தும் திகதிகளை பட்டியலிட்டு அறிவிக்குமாறு அவர் அரச அதிபரைக் கோரியிருக்கின்றார்.

ஆக, அமுல்பேபிக்கு வரிசையாக – கூட்டங்கள் ரீதியாக – தலையிடி காத்திருக்கின்றது என்பது நிச்சயம்.

– மின்னல் –




# மரண அறிவித்தல்

## திருமதி விக்கினேஸ்வரன் பஞ்சவர்ணம்



அண்ணமார் கோவிலடி, இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட, திருமதி விக்கினேஸ்வரன் பஞ்சவர்ணம் அவர்கள் நேற்றுமுன்தினம் (29.03.2022) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி – செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், திரு.ஐ.விக்னேஸ்வரன் (செட்டி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஐயாத்துரை – இரத்தினம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், குணரத்தினம் (அமரர்), புனிதவதி, கனகலிங்கம் (அமரர்), முத்துலிங்கம், தர்மலிங்கம் (அமரர்), பராசக்தி, சுந்தரலிங்கம் (அமரர்) ஆகியோரின் அன்பு நிறைந்த சகோதரியும், பரமேஸ்வரி (அமரர்), சரஸ்வதி, மகேஸ்வரன், யோகேஸ்வரி (அமரர்), சிவகுமார் ஆகியோரின் மைத்துனியும், ஐங்கரன், வினோதினி, திருக்குமரன், கோகுலராம், மகாசேனன் (உதவி விரிவுரையாளர் – யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்) ஆகியோரின் நேசமிகு தாயாரும், தர்மினி, சசீந்திரராஜன், பிரகாஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஷ்ணுஜன், அஷ்வினி, ஜஸ்மினி, றோஸ்மினி, விதுர்ஜன், கருணிகா, தருணிகா, திருக்ஷிகா, விகாஷன், ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2022) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணாமார் கோயிலடி, இணுவில், கிழக்கு, இணுவில்.

தகவல்:—குடும்பத்தினர்.
0773583714, 0771307982


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் ஆசீர்வாதம்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை அரசுத் தலைமையுடன் ஆரம்பித்திருக்கும் நேரடிப் பேச்சை இந்தியா உட்பட்ட சர்வதேச தரப்புகள் வரவேற்றிருக்கின்றன.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான நேரடிப் பேச்சுகள் ஆரம்பமாக முன்னரே அதனை வரவேற்றது அமெரிக்கா. கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் அம்மையார், இந்தப் பேச்சுக்கள் மூலமாக நல்ல பெறுபேறுகளைத் தாங்கள் எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்று தெரிவித்திருந்தார்.**

**முதல் சுற்றுப் பேச்சின் பின்னர் அதனை வரவேற்று கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் அம்மையார் கருத்து வெளியிட்டிருந்தார்.**

**இதே சமயம், கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரும் இந்தச் சந்திப்பை – ஜனாதிபதி கோட்டாபயவுடன் தமிழ்த் கூட்டமைப்பு நேரடியாக நடத்தும் பேச்சுக்களை – சிலாகித்து வரவேற்றுள்ளார்.**

**இது தொடர்பில் இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –**

**சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றை ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் பெற்றுக் கொள்ளும் தமிழர்களின் நீதியான அபிலாஷைகளுக்கு இந்தியா எப்போதும் ஆதரவாக இருந்து வருகின்றது என்பதை இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மீண்டும் வலியுறுத்தினார் என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.**

**நேரடிப் பேச்சுகளில் ஈடுபட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரின் அரசுத் தரப்பினரிடமும் மறுபக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடமும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைச் சுட்டிக்காட்டினார் என்று கூறப்படுகின்றது.**

**இங்கு, இலங்கையில் நேரடிப் பேச்சுகளில் ஈடுபடுபவர்கள் கோட்டாபய ராஜபக்ஷவும், அவரின் அரசுத் தரப்பினரும். மறுபக்கத்தில் சம்பந்தனும் அவரது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்.**

**ஆனாலும் கூட, அமெரிக்காவின் பின்புல ஆசீர்வாதத்துடன் தோன்றாய்த் துணையாய்க் களத்தில் இந்தியாவும் காத்திரமாக அதில் பங்களித்து நிற்கின்றது என்பது கண்கூடு.**

**ஒரு காலத்தில் பௌத்த, சிங்களத் தீவிரவாத வெறிப் போக்கு ஒன்றே தனது மார்க்கம் என்று கங்கணம் கட்டி நின்ற கோட்டாபய –**

**நான் பௌத்த, சிங்கள மக்களினால் மட்டுமே இந்த ஜனாதிபதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவன் என்பதால் அவர்களின் விருப்புக்கு மாறாக எதையும் செய்யவே மாட்டேன் என்று பகிரங்கமாக அடம் பிடித்து நின்ற நாட்டின் ஜனாதிபதி –**

**"எனது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்பேன். அது எனது கடமை. அதன் ஒரு கட்டமாகவே தமிழ்க் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளேன். அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, கைதிகள் விடுதலை உள்ளிட்ட ஐந்து விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்புடன் முதல் கட்டமாகப் பேசியுள்ளேன். இந்தப் பேச்சுக்கு பல தரப்புகளில் இருந்தும் வரவேற்புக் கிடைத்துள்ளது. தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் நான் தீர்வு காண்பேன்." – என்று இப்போது உறுதிபடக் கூறுகின்றார்.**

**இதுதான் தலைகீழ் மாற்றம். அந்த மாற்றத்தின் பிரதான சூத்திரதாரி – பின்புலக் காரணம் – இந்தியாதான்.**

**இந்தப் பேச்சுக்கு பல தரப்புகளில் இருந்தும் வரவேற்புக் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டுவது அமெரிக்கா மற்றும் இந்தியாவின் ஆசீர்வாதத்தைத்தான்.**

# மட்டு. முதல்வரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் இறுதி உத்தரவு மே 11 இல்!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவிப்பு



மட்டக்களப்பு மாநகரசபையால் மீளப் பெறப்பட்ட அதிகாரங்களை மாநகர ஆணையாளர் தொடர்ந்தும் பயன்படுத்துகின்றமை தொடர்பில் மாநகர முதல்வரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் இறுதி உத்தரவு எதிர்வரும் மே 11 ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என வழக்கின் சட்டத்தரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மேற்படி வழக்கின் விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் சட்ட வரம்பை மீறி செயற்படுகின்றார் என்று முறையிட்டு அவர் அவ்வாறு செயற்படுவதைத் தடுப்பதற்கான ஆணை கோரி மாநகர முதல்வரால் தாக்கல் செய்த தடுப்பாணை வழக்கு மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த வழக்குகளில் சட்டத்தரணி முஹைதீன் காலித்துடன் நான் முன்னிலையாகியிருந்தேன். இறுதி வாதங்களை நீதிமன்றம் செவிமடுத்து இறுதி உத்தரவிற்காக மே 11 ஆம் திகதி குறிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஏதாவது இணக்கப்பாடு எட்டப்படுகின்றதா? என பரிசீலிப்பதாக இருந்தது. அவ்வாறான இணக்கப்பாடு இல்லாத காரணத்தால் மனுதாரருடைய பிரதி சத்தியக்கடதாசிகளை அணைப்பதற்காக மே 04 ஆம் திகதி கொடுக்கப்பட்டிருக்கின்றது.

வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தால் வழக்கின் விடயங்கள் பற்றி நாங்கள் எதுவும் சொல்ல முடியாது. நீதிமன்றம் இரு தரப்பினருடைய வாதங்களையும் செவிமடுத்துள்ளது. சரியான உத்தரவொன்றை நீதிவான் அவர்கள் கொடுப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்தார்.

# இலங்கையிடம் இருந்து இந்தியா பாடம் கற்றுக் கொள்ளவேண்டும்!

## கேரள மாநில அரசு அறிவுரை

இலங்கையின் தவறுகளில் இருந்து இந்திய அரசாங்கம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கேரள நிதியமைச்சர் கே.என். பாலகோபால் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அந்த நாட்டின் தீவிரமான உலகமயமாக்கல் கொள்கையின் விளைவாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் இதே கொள்கையை இந்தியா பின்பற்றி வரும் நிலையில், இந்தியாவுக்கு இது ஒரு பாடமாக இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

எனவே, இந்தியப் பொருளாதாரத்தில் உள்ள பிரச்சினைகளைச் சரி செய்ய இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாலகோபால் கூறினார் என எகனொமிக் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு உலகமயமாக்கல் கொள்கையின் கண்மூடித்தனமான பின்பற்றுதலே காரணம் என்று குற்றம் சாட்டிய பாலகோபால், அங்குள்ள அரசுகள் சுற்றுலா போன்ற வெளிநாட்டு வருமானம் ஈட்டும் துறைகளில் முழுமையாக கவனம் செலுத்தின எனவும், கொரோனா தொற்றுநோய்களின் போது பொருளாதாரத்தின் கடுமையான வீழ்ச்சியின் விளைவாக விவசாயம் போன்ற முதன்மைத் துறைகளைப் புறக்கணித்ததாகவும் கூறியுள்ளார்.

இந்திய அரசு, தனது மொத்த வரவு - செலவுத் திட்டத்தில் பாதிக்கு மேல் கடன் பெறுகிறது.

முறையாக வரிகளை வசூலிப்பதில்லை. அத்துடன் மத்திய அரசு உற்பத்தித் துறைகளில் அதிக பணத்தை முதலீடு செய்வதில்லை என்றும் பாலகோபால் குற்றம் சுமத்தியுள்ளார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி 6 பேருக்கு இந்தியாவில் குற்றப்பத்திரிகை!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கிய வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 6 பேர் மீது இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு (என்.ஐ.ஏ.) குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளது.

இந்தியா மற்றும் இலங்கையில் நடவடிக்கைகளை மீண்டும் ஒருங்கிணைத்து புதுப்பிக்கும் முயற்சியில், போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, செயலற்ற வங்கிக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்த பணத்தை பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் வகையில் திருப்பியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டவர்களான லெட்சுமணன் மேரி பிரான்சிஸ்கா, டி. கெனிஸ்டன் பெர்னாண்டோ மற்றும் கே.பாஸ்கரன் ஆகியோர் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து இந்திய அடையாள ஆவணங்களைப் பயன்படுத்தி செயற்படாத வங்கிக் கணக்குகளில் இருந்து பணத்தைப் பெறுவதற்கு சதி செய்துள்ளனர்.

இந்தநிலையில் இந்திய அடையாள ஆவணங்களைப் போலியாகத் தயாரிப்பதில் ஜோன்சன் சாமுவேல், தர்மேந்திரன் மற்றும் மோகன் ஆகியோர் உடந்தையாக இருந்தனர் என்று இந்திய தேசிய புலனாய்வு சேவை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளில் ஒருவரான 50 வயதான மேரி பிரான்சிஸ்கா, போலி கடவுச்சீட்டை வைத்திருந்ததற்காக குற்றம் சுமத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டு சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு சென்னையின் 'கியூ' பிரிவால் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தநிலையிலேயே மேலும் பலகடவுச்சீட்டுக்களும் போலியான ஆவணங்களும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டமை தெரியவந்ததாக தேசிய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள்; தற்கொலைதாரிகளின் தந்தை சார்பில் பிணை!

## கோரிக்கை முன்வைக்க அவரது சட்டத்தரணிகள் முடிவு

உயிர்த்த ஞாயிறு தினம் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதல்களில், சினமன் கிராண்ட் மற்றும் ஙரில்லா ஹோட்டல்களில் குண்டினை வெடிக்கச் செய்த தற்கொலை குண்டுதாரிகளான சகோதரர்களின் தந்தை இப்ராஹீம் ஹாஜியார் என அறியப்படும் யூசுப் மொஹம் மட் இப்ராஹீம் சார்பில் பிணை கோரிக்கை முன் வைக்க அவரது சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பில் அவரது சட்டத்தரணிகள் கொழும்பு மேல் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

இப்ராஹீம் ஹாஜியார் என அறியப்படும் யூசுப் மொஹம்மட் இப்ராஹீம் உள்ளிட்ட மூவருக்கு எதிராக மேல் நீதிமன்றில் குற்றவியல் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இப்ரஹீம் ஹாஜியாருக்கு மேலதிகமாக அவரது இரு புதல்வர்களே அந்த வழக்கின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர். இப்ராஹீம் ஹாஜியார் என அறியப்படும் யூசுப் மொஹம்மட் இப்ராஹீம், மொஹம்மட் இப்ராஹீம் ஹிஜாஸ் அஹமட், மொஹம் மட் இப்ராஹீம் இஸ்மாயீல், ஆகியோரே இவ்வழக்கின் பிரதிவாதிகளாவர்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் அறிந்திருந்தும் அது தொடர்பில் பாதுகாப்பு தரப்புக்கு அறிவிக்காமல் தகவல்களை மறைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் பிரதிவாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் தண்டனை சட்டக் கோவையின் கீழ் இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

அதன்படி இந்த விவகார வழக்கு செவ்வாய்க்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது பிரதிவாதிகள் மூவரும் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவ்வாறான நிலையிலேயே அவர்கள் சார்பில் பிணை கோரிக்கையை முன் வைக்க எதிர்பார்ப்பதாக மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அதன்படி வழக்கு எதிர்வரும் மே 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# தரம்குறைந்த டீசலால் சாரதிகள் அசௌகரியம்

தரம் குறைந்த டீசலால் அசௌகரியங்களை எதிர்நோக்கின்றோம் என அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் என்.எம்.கே. ஹரிஸ்சந்திர பத்மசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஒரு லீற்றர் டீசலில் எட்டு கிலோ மீற்றர் வரையில் பயணம் செய்ய முடிந்த போதிலும் தற்பொழுது அதே அளவில் 4 கிலோ மீற்றர் தூரம் மட்டுமே பயணம் செய்ய முடிகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

தரம் குறைந்த டீசல் காரணமாக அநேகமான பாடசாலை பஸ் மற்றும் வான்கள் தொழில்நுட்ப கோளாறுகளுக்கு உள்ளாகியுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை போக்குவரத்து செய்யும் பஸ், வான் சாரதிகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க நேரிட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைகளில் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலை மாணவர்களைப் போக்குவரத்து செய்யும் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னுரிமை வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

நாடு முழுவதிலும் சுமார் 40 ஆயிரம் பாடசாலை பஸ் மற்றும் வான்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் தற்பொழுது 10 ஆயிரம் வாகனங்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன எனவும் ஹரிஸ்சந்திர பத்மசிறி தெற்கு ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார்.

# எரிபொருள் நெருக்கடியினால் இணைய சேவைகள் பாதிப்பு

இலங்கையில் நீண்ட நேரம் மின் விநியோகம் தடை செய்யப்படுவதால், இணைய சேவைகளை வழங்குவதிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் இன்மையால் 3 ஜி மற்றும் 4 ஜி வலையமைப்பில் குறுக்கீடு குறைப்பு அமைப்புகள் செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொலைபேசி கோபுரங்களின் ஜெனரேற்றர்களுக்கான டீசல் வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நேற்று (புதன்கிழமை) முதல் நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்படும் போது தொலைபேசி கோபுரங்களில் அவற்றின் 3 ஜி மற்றும் 4 ஜி குறுக்கீடு குறைப்பு அமைப்புகள் செயலிழக்கப்படும்.

இதன் காரணமாக இணையத் தரவுகள் பரிமாற்றும் வேகம் குறைவடையவுள்ளது. பொதுவாக டீசல் ஜெனரேற்றர்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டாலும், அதிக மின்சாரம் தேவைப்படுவதால், அவற்றை இயக்குவதற்கு பக் அப் பற்றிரி சக்தி போதுமானதாக இல்லாதமையால், இதற்கான டீசல் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணைய வேக குறைப்பால் சாதாரண அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் போன்ற சேவைகள் தற்போது ஒரு பிரச்சினையாக இல்லை. ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 12 மணிநேரம் வரை மின்சாரம் வழங்கும் அதே வேளையில், தொலைபேசி கோபுரங்களை இயக்குவதற்கு அவற்றின் பக் அப் பற்றரி சக்தி போதுமானது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# எரிபொருள்களின் தரத்தில் எந்த பிரச்சினையும் இல்லை

**அரசு அறிவிப்பு**

நாட்டில் பயன்படுத்தப்படும் எரிபொருள் தரத்தில் எந்தவித பிரச்சினையும் இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தவை வருமாறு –

நாட்டுக்கு கொண்டுவரப்படும் எரிபொருள், கப்பலுக்கு ஏற்றப்படும் சந்தர்ப்பம் முதல் கப்பலில் இருந்து இறக்கப்படும் வரையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிறுவனங்கள் சிலவற்றால் சம்பந்தப்பட்ட எரிபொருளின் தரம் பரிசோதனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு நிறுவனத்திலும் எரிபொருள் வகைகளின் தரம் தொடர்பான பிரச்சினை பதிவாகவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சில ஊடகங்கள் இது தொடர்பாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கிறேன் எனவும் அமைச்சர் கூறினார். எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்களுக்குத் தேவையான எரிபொருளை குறைவின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் கூறினார்.

# பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த தமிழக சிறுவன்!





தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரையும், மீண்டும் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை பாக்கு நீரிணை கடல் வழியை நீந்தி சிறுவன் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

தமிழகம் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த சினேகன் (வயது 14) என்பவரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார், பாக்கு நீரிணையை இரு வழியாக நீந்தி கடக்க முயற்சி செய்து 19 மணி நேரம் 45 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை செய்துள்ளார்.

மேற்படி சிறுவன் 2019 ஆம் ஆண்டு கோவாவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்றுள்ளார். அதே போல் கர்நாடக மாநிலம் தொன்னூரில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்நிலையில் தனுஷ்கோடி அரிச்சல் முனை முதல் இலங்கை தலைமன்னார் வரை நீந்தி கடந்து பின் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி அரிச்சல் முனை வரை பாக்கு நீரிணையை நீந்தி கடப்பதற்காக கடந்த மாதம் டெல்லியில் உள்ள வெளியுறவுத்துறை, பாதுகாப்பு துறை அமைச்சகங்கள் மற்றும் இலங்கை தூதரகத்துக்கு அனுமதி கோரி கடிதம் அனுப்பி இருந்தன.

இந்திய - இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் சிறுவன் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல் முனையில் இருந்து கடலில் நீந்த ஆரம்பித்து இரவு 09.55 மணிக்கு இலங்கை தலை மன்னாரை 7 மணி 55 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

பின்னர் அங்கிருந்து இரவு 10.30 மணிக்கு புறப்பட்டு செவ்வாய்க்கிழமை காலை 9.45 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனை வந்தடைந்தார். 19 மணி நேரம் 45 நிமிடத்தில் பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

கடந்த 1974 ஆம் ஆண்டு இலங்கையைச் சேர்ந்த வி.எஸ்.குமார் ஆனந்த் முதல் முறையாக தலைமன்னார் முதல் தனுஷ்கோடி மீண்டும் தனுஷ்கோடி முதல் தலைமன்னார் வரை 51 மணி நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

அவரை தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு இலங்கையை சேர்ந்த ரேன் அபே சுந்தர தலைமன்னார் முதல் தனுஷ்கோடி பின்னர் தலைமன்னார் வரை 28 மணி நேரம் 19 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்தார்.

இந்நிலையில் இந்தியாவைச் சேர்ந்த சினேகன் முதன் முறையாக தனுஷ்கோடி முதல் தலைமன்னார் பின்னர் அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடி வரை இரு வழி நீந்தி கடக்க முயற்சி செய்து 19 மணி நேரம் 45 நிமிடத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

கடலில் நீந்தி வந்த சிறுவன் சினேகனை மண்டபம் கடலோர காவல்படை கமாண்டர் நாகேந்திரன் வரவேற்றார்.

இவர்களுக்கு உதவியாக இலங்கை கடற்படையின் ரோந்து படகு சர்வதேச எல்லை வரையிலும், இந்திய கடல் பகுதியில் மெரைன் பொலிஸார் மற்றும் இந்திய கடலோர காவல்படையின் கப்பலும் பாதுகாப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# பிராந்திய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியிலேயே பிம்ஸ்டெக் அமைப்பின் அங்கீகாரம் தங்கியுள்ளது



## ஜி.எல்.பீரிஸ் கருத்து

பிம்ஸ்டெக் அமைப்பொன்று ஏனைய பிராந்திய ரீதியான கட்டமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கும் அவற்றுடனான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

குறிப்பாக பிராந்திய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் வாழ்வின் சுபீட்சம் ஆகியவற்றிலேயே பிம்ஸ்டெக் அமைப்பின் அங்கீகாரம் தங்கியிருப்பதால், அதனை முன்னிறுத்திச் செயற்படவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, பிம்ஸ்டெக் அமைப்பின் அங்கத்துவநாடுகளின் துறைமுகங்களுக்கு இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் நாடுகளுக்கு இடையிலானபயணிகள்படகுசேவையை ஆரம்பித்தல் ஆகியவற்றின் மூலம் உறுப்புநாடுகளின் மக்களுக்கு இடையிலான நல்லுறவை மேம்படுத்தமுடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (பிம்ஸ்டெக்) 5 ஆவது மாநாடு கடந்த திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

மூன்று நாள்கள் மாநாட்டின் இரண்டாவது நாளான செவ்வாய்க்கிழமை பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அமைச்சர்களின் 18ஆவது கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆரம்ப உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

இன்றைய அமைச்சு மட்டக்கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன் பிம்ஸ்டெக் அமைப்பில் அங்கம்வகிக்கும் உறுப்புநாடுகளின் பங்களிப்பைஉறுதிசெய்யும்வகையிலும் அமைந்துள்ளது. இந்தக்கூட்டம் நடைபெறவிருக்கும் அரச தலைவர்கள் கூட்டத்தில் செயற்திறனான விளைவுகளை ஏற்படுத்துவதற்கான முன்னோடியாக அமையும் என நம்புகின்றேன்.

பொருளாதாரரீதியில்நோக்குகையில் பிம்ஸ்டெக் அமைப்பு இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு கட்டமைப்பாக விளங்குகின்றது. குறிப்பாக வங்காள விரிகுடா மிகப்பெரிய பரப்பைக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்துசமுத்திரத்தில் இலங்கையின் கேந்திர அமைவிடம் வெவ்வேறு பாரம்பரியங்களையும் கலாசாரத்தையும் கொண்ட பல்லின மக்களையும் நாடுகளையும் ஈர்க்கக்கூடியவாறான தோர் காந்தமாகக் காணப்படுகின்றது.

அதன்படி இம்முறை இலங்கையில் நடத்தப்படும் இந்த பிம்ஸ்டெக் மாநாட்டின் மூலம் தெற்கு மற்றும் தென்கிழக்காசியாவைச்சேர்ந்த உயரதிகாரிகளும் இராஜதந்திரிகளும் ஓரிடத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

உலகப்பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இயலுமையுடைய பிம்ஸ்டெக் அமைப்பின் கொள்கைகளும் செயற்பாடுகளும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துத்தரப்பினரதும் நலனை முன்னிறுத்தியவையாக அமையும் அதேவேளை, இந்தப் பிராந்தியத்தினதும் மக்களினதும் சுபீட்சத்தை உறுதிப்படுத்துவதே அதன் அடிப்படை நோக்கமாக அமையவேண்டும்.

அதேவேளை பிம்ஸ்டெக் சாசனம் ஏற்கப்பட்டு, பல்வேறு துறைகள் சார்ந்த ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன.

குறிப்பாக தொழில்நுட்ப வசதிகள் தொடர்பில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக உறுப்புநாடுகளுக்கு இடையில் நவீன தொழில்நுட்பங்களை அடிப்படையாகக்கொண்ட ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று கடந்தகாலங்களில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலகநாடுகள் அனைத்தும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்தன.

அந்த நெருக்கடி வைரஸ் பரவலுக்கு எல்லைகளோ, தடைகளோ இல்லை என்ற விடயத்தை உணர்த்தியது. அது மாத்திரமன்றி இவ்வாறான சவால்கள் ஏற்படும்போது பிம்ஸ்டெக் போன்ற பிராந்திய ரீதியான கட்டமைப்புக்கள் பிராந்திய நாடுகள் அனைத்தையும் இணைத்துக்கொண்டு அவற்றுக்கு முகங்கொடுக்கவேண்டியதன் அவசியத்தையும் புலப்படுத்தியது.

மேலும் அங்கத்துவ நாடுகளுக்கு இடையிலான பல்துறைசார் ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்பதுடன் தனியார் துறையினரின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் அதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் என்று நம்புகின்றோம்.

அடுத்ததாக நாடுகளுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்தக்கூடிய முக்கிய துறையாகப் போக்குவரத்துத்துறை காணப்படுகின்றது. நவீன தொழில்நுட்பப் பங்களிப்புடன்கூடிய செயற்திறன்மிக்கபோக்குவரத்துக்கட்டமைப்பைக் கொண்டிருப்பதானது பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் முக்கிய பங்களிப்பை வழங்கும்.

அவற்றில் குறிப்பாக நாடுகளின் துறைமுகங்களுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதுடன் பயணிகள் படகுசேவையை ஆரம்பிப்பது நாடுகளுக்கு இடையிலான மக்களின் நல்லுறவு மேம்பாடடைவதற்கு வழிவகுக்கும்.

அத்தோடு பிம்ஸ்டெக் அமைப்பைப் போன்று ஏனைய பிராந்திய ரீதியான கட்டமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும் அவற்றுடனான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிராந்திய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் வாழ்வின் சுபீட்சம் ஆகியவற்றிலேயே பிம்ஸ்டெக் அமைப்பின் அங்கீகாரம் தங்கியிருக்கின்றது. அந்தவகையில் உறுப்பு நாடுகளின் நலனை முன்னிறுத்தி எதிர் வருங் காலங்களில் பிம்ஸ்டெக் அமைப்பினால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். – என்றார்.

# புலம்பெயர் நாட்டவர் அனுப்பும் பணம் முடிவை மாற்றியது இலங்கை அரசு!

வர்த்தக வங்கிகளில் இருக்கும் வெளிநாட்டு நாணயங்களை மத்திய வங்கிக்கு விற்க வேண்டும். நாங்கள் அதை வாங்கி அதற்கு சமமான இப்போது இருக்கும் நாணய மாற்று வீதத்தின் படி அதற்குரிய ரூபாவை திருப்பி உங்களுக்கு தருவோம் என்கிற செய்தி பரவலாக பேசப்பட்டது.

ஆனால் அது ஒரு சிக்கலை உருவாக்கி விடும் வெளிநாட்டில் இருந்து தங்களது உழைப்பை அனுப்பும் மக்கள் அந்த பணத்தை அனுப்பாமல் அந்தநாட்டு வங்கிகளிலே அந்த பணத்தை முதலீடு செய்யக்கூடிய ஓர் ஆபத்தான நிலையை உருவாக்கி இருக்கும். ஆகவேதான் இலங்கை மத்திய வங்கி அதை செய்ய விரும்பவில்லையென அரசியல் மற்றும் பொருளாதார ஆய்வாளர் இதயச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் தற்போது நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சு மற்றும் அனைத்து கட்சி கூட்டங்களை பார்க்கும் போது வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதியம் என்ற விடயத்தை உருவாக்குகிறார்கள்.

அதாவது அவர்களைப் பொறுத்தவரை இந்த வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் இருப்பதற்கு சீனாவிடம் இருந்து 100 கோடி டொலர் கடன், 1.5 பில்லியன் ரூபாக்கான கிரேடிட் லைன் என்ற கொடுக்கல் வாங்கல் விடயங்கள் மற்றும் இந்தியாவிடம் இருந்து 50 கோடி கடன் என இலங்கை அரசு பெற்று வருகிறது.

இதனைப் பார்க்கும் போது வங்குரோத்து நிலையை நாடு அடையாமல் இருப்பதற்கான ஒரு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறார்கள் அவர்களுடைய எதிர்பாப்பு என்னவென்றால் இந்தக் கோடை கால விடுமுறை ஆரம்பமாகி விட்டது.

இனி உல்லாசப் பயணத்துறை வளர்ச்சியடையும், கொவிட்டின் பாதிப்பும் குறைவு. ஆகவே தங்களுடைய பொருளாதாரம் மேலெழும்பக்கூடிய அதாவது வெளிநாட்டு நாணய கையிறுப்பு கொஞ்சம் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. பிறகு ஏன் நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்ற அடிப்படை சிந்தனையாக கூட இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான விமான சேவை விரைவில் மீளவும் ஆரம்பிப்பு!

இடைநிறுத்தப்பட்டுள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான விமான சேவையை விரைவில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்காக மாற்றுக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுநாயக்க – மொஸ்கோ நேரடி விமான சேவை கடந்த திங்கட்கிழமை முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விமானங்களுக்கு காப்புறுதி செய்திருந்த பிரித்தானிய விமான நிறுவனம், ரஷ்யாவிற்கு பயணிக்கும் ஸ்ரீலங்கன் விமான காப்புறுதியை இரத்து செய்திருந்தது.

இதன்காரணமாகவே கட்டுநாயக்க – மொஸ்கோ நேரடி விமான சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இந்த விடயம் இலங்கை அரசு எடுக்கப்பட்ட தீர்மானமல்ல எனவும் தமது நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதொரு விடயத்தால் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு தமது விமான சேவையை இடைநிறுத்த வேண்டியேற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை – ரஷ்யாவுக்கு இடையிலான நேரடி விமான சேவையை இடைநிறுத்த எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை எனவும், இது ரஷ்யாவுக்கு எதிராக எடுக்கப்பட்டதொரு தீர்மானம் என வெளியாகும் செய்தியை முற்றாக நிராகரிக்கிறேன் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மசாஜ் நிலையமெனும் போர்வையில் விபசார விடுதி; 5 பெண்கள் கைது!

கல்கிசை பிரதேசத்தில் மசாஜ் நிலையமெனும் பேரில் இயங்கி வந்த இரண்டு விபசார விடுதிகளை சோதனைக்குட்படுத்தியதில் ஐந்து பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கல்கிசை பொலிஸ்பிரிவில் காலி வீதியில் இயங்கி வந்த மேற்படி விபசார விடுதிகளை சோதனையிட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் சந்தேக நபர்களான பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஐந்து பெண்களும் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட மின்னேரியா, தெனியாய, மஹியங்கனை, பாதுக்க மற்றும் மன்னம்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# சீனா, இந்தியா மற்றும் அமெரிக்காவின் படையெடுப்புக்குரிய நாடாக இலங்கை!

## அஷோக அபேசிங்க சுட்டிக்காட்டு

ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் தாய்நாட்டை வெளிநாட்டவர்களுக்கு காட்டிக்கொடுத்தமையின் பலனாகவே இலங்கை இன்று சீனா, இந்தியா, அமெரிக்காவின் படையெடுப்புக்குரிய நாடாக மாறியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 100 கோடி டொலர் கடன் தொகையில் 75 கோடி டொலர் மதிப்புள்ள பொருள்களை இந்தியாவில் இருந்து மட்டுமே வாங்க முடியும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்ட பின்னரே அவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சர் தாய்நாட்டை வெளிநாட்டவர்களுக்கு காட்டிக்கொடுத்தமையின் பலனாகவே இலங்கை இன்று சீனா, இந்தியா, அமெரிக்காவின் படையெடுப்புக்குரிய நாடாக மாறிவிட்டது.

கடன்களை மீளச்செலுத்த முடியாத நிலையில் நாடு காணப்படும் போது, மேலும் கடன் வழங்குவதற்கு ஏதேனும் நாடுகள் முன்வருமாயின் அவற்றுக்கு சொத்துக்கள் வழங்கப்பட வேண்டும்.

அதனையே ராஜபக்ஷக்கள் செய்து கொண்டிருக்கின்றனர். ராஜபக்ஷர்களே இலங்கையில் அதிகளவு வெளிநாட்டு கடனைப் பெற்றுள்ளனர். நாட்டில் எரிசக்தியை இந்தியா கட்டுப்படுத்துகிறது. எரிபொருள் விலையையும் இந்தியாவே தீர்மானிக்கிறது.

கடன் பெறுவதற்காக தேசிய வளங்களை விற்கின்றனர். மத்தள விமான நிலையம் இந்தியாவுக்கு வழங்கப்படப் போகிறது என்ற தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

விமானிகளை இந்திய அதிகாரிகள் நியமிக்க உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. எம்.சி.சி. ஒப்பந்தத்தை வேறு பெயர்களில் இந்தியாவுடன் கையெழுத்திட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியிடம் வேலைத்திட்டம் உள்ளது. ஆனால் இதை ஒரே இரவில் செய்ய முடியாது.

இந்த நாட்டை மீட்க சுமார் 200 கோடி டொலர்கள் தேவைப்படும். இந்த அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையும் சிக்கலானதாகும்.

19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதன் பின்னர் உலக நாடுகளுக்கு எம்மீது இருந்த நம்பிக்கை முற்றாகச் சிதைந்து போயுள்ளது.



நாட்டில் மீண்டும் குடும்ப ஆட்சி அமையக் கூடாது என்று சகல தரப்பிடமிருந்தும் கருத்துக்கள் வெளி வருகின்றன. அரச செலவில் எழுபது சதவீதம் செலவிடப்படுகிறது.

குடும்ப ஆட்சி, ஜனநாயகத்தை அழித்துவிடும். இந்தக் குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான வேலைத் திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப்படும். - என்றார்.

# மோட்டார் சைக்கிள்களை மோதித்தள்ளிய பட்டா!

## ஆவரங்காலில் சம்பவம்

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பட்டா ரக வாகனம் மோட்டார் சைக்கிள்களை எதிரே உள்ள பாலத்தினுள் மோதித் தள்ளியது. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகே இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீது மோதியதில் ஒரு மோட்டார் சைக்கிள் பட்டா வாகனத்துடன் சேர்ந்து பாலத்தினுள் சென்றது.

இந்தச் சம்பவத்தில் பட்டா வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் இரண்டும் சேதமடைந்துள்ளன.

இதில் மோட்டார் சைக்கிளுடன் நின்ற இருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

பட்டா ரக வாகன சாரதியின் கவனக்குறைவால் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சுற்றுச்சூழலில் வீசப்படும் கழிவுகள் கடுமையான சட்ட நடவடிக்கையாம்!

## சுற்றாடல் அமைச்சர் எச்சரிக்கை



தினந்தோறும் ஆயிரக்கணக்கான வெற்று தண்ணீர் போத்தல்கள், வெற்று குளிர்பான போத்தல்கள் மற்றும் முகக்கவசம் முதலானவை சுற்றுச்சூழலில் வீசப்படுகின்றன என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த உக்காத பொருள்களால் நிலம் மற்றும் நீரிலுள்ள உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படுத்துவதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தவை வருமாறு -

உயிரினங்களின் நலனைப் பொருட்படுத்தாமல், திறந்த வெளியில் இவற்றை வீசுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இந்த செயல்முறையை எளிதில் நிறுத்திவிடமுடியாதுஎன்றுதெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் இது போன்று சுமார் 10 லட்சம் உக்காத பொருள்களை மக்கள் வீசுவதால் நிலம் மாசுபடுவது மட்டுமல்லாமல் ஆறுகள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் கடலில் வாழும் பெறுமதி மிக்க கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் மற்றும் பவளப்பாறைகள் அழிவடைகின்றன எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தடுப்பதற்கு சுற்றுச் சூழல் ஆர்வலர்கள், தனியார் துறை சமூக சேவை நிறுவனங்களுடன் இணைந்து இந்தக் குப்பைகளை அகற்றுவதன் முக்கியத்துவம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், முக்கிய நகரங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்களுக்குஅருகில்அமைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளைப் பயன்படுத்தவும் ஒரு சிறப்பு திட்டத்தை ஆரம்பித்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

உக்காத பொருள்களை மீள் சுழற்சி செய்வதற்கான புதிய இடங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நவக்கிரியில் கடத்தப்பட்ட இளைஞன் கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்பு !

## வைத்தியசாலையில் சேர்ப்பு

புத்தூர் மேற்கு, நவக்கிரியில் கடத்தப்பட்ட இளைஞர் இரண்டு நாள்களின் பின்னர் கைகள் கட்டப்பட்ட நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலைமீட்கப்பட்டார்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

நவக்கிரி சனசமூக நிலையத்தடியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்ட அவர் சிகிச்சைக்காக அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புத்தூர் மேற்கு, நவக்கிரிக்கிரியைச் சேர்ந்த அருந்தவராசா சயந்தன் என்ற 30 வயது இளைஞரே கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது உறவினர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். கடந்த சனிக்கிழமை இரவு9.30மணியளவில்மின்சாரம்தடைப்பட்டிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டு வளாகத்தில் இருந்து எவரோ பாய்ந்து வெளியே செல்வதை அவதானித்த இளைஞர் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தார் என்றும், வெளியே சென்ற இளைஞரை வீட்டின் முன்புறம் உள்ள தோட்ட வெளியில் நின்றிருந்த மூவர் துரத்திச்சென்றனர்என்றும்உறவினர்கள்பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

அதன்பின்னர் இளைஞர் வீடு திரும்பவில்லை. உறவினர்கள் தேடியபோது அவரது கைபேசி வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டது.

அதேநேரம், கடந்த 12 ஆம் திகதி இளைஞரின் வீட்டுக்கு வந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் வெட்டுக்காயத்துக்கு உள்ளான இளைஞரின் தந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட இருவர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் இரண்டு நாள்களின் பின்னர் இளைஞர் கைகள் கட்டப்பட்ட நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நவக்கிரி சனசமூக நிலையத்துக்கு அருகில் மீட்கப்பட்டார். அவர் சிகிச்சைக்காக அச்சு வேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சையின் பின்னர் இளைஞரிடம் வாக்குமூலம் பெறப்படும்என்றுஅச்சுவேலிபொலிஸார்தெரிவித்தனர்.

# ஆடைகளின் விலை சடுதியாக எகிறியது!

*தைத்த ஆடைகளின் விலைகள் சுமார் 40 வீதத்தால் உயர்வடைந்துள்ளன என அகில இலங்கை சிறு கைத்தொழிலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நிலுக்ஸ குமார தெரிவித்துள்ளார்.*

*மின்சாரத் தடை, டொலர் பற்றாக்குறை மற்றும் மூலப்பொருள் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு தைத்த ஆடைகளின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.*

*குறிப்பாக, மஹரகம பமுனுவ பகுதியில் புத்தாண்டு காலத்தில் 200, 300 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட தைத்த ஆடைகள் தற்பொழுது 800 முதல் 1000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*தைத்த ஆடைகள் உற்பத்தி செய்யப் படும் மூலப்பொருள்களின் விலைகள் பாரிய ளவில் அதிகரித்துள்ளன எனத் தெரிவித்துள் ளார். 600 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப் பட்ட நூல் இன்று 1800 ரூபாவிற்கு கொள் வனவு செய்ய நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சிறு ஆடை உற்பத்தி நிலையங்கள் மின்சாரத் தடையால் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.*

# மின்சாரத்தைச் சேமிக்க அரச ஊழியர்கள் வீட்டில் இருந்து பணியாற்றும் நடைமுறை!

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் மின்சா ரத்தை சேமிக்க அரச ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்றும் நடைமுறையை அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு போதுமான அளவு நீர் மற்றும் எரிபொருளின் பற்றாக்குறையால் நாளாந்த மின்வெட்டை குறைப்பதற்கான வழிமுறையொன்றை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க முன் வைத்துள்ளார்.

அடுத்த சில நாள்களில் அரச ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை நடைமுறைப்படுத்தினால் தினசரி மின்வெட்டை இன்னும் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் குறைக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார தடை ஏற்படும் காலப்பகுதியினுள் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக ஜெனரேட்டர்களைப் பயன்படுத்த நேரிடும். அதற்காக பயன்படுத்தப்படும் டீசல் மற்றும் தினசரி போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் டீசல் அளவை குறைப்பதன் மூலம் அந்த டீசலை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# அடுத்த சில நாள்கள் வாழ்வது மிகவும் கடினம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

எதிர்வரும் சில நாள்கள் மக்கள் வாழ்வது மிகவும் கடினமாக இருக்கும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்நிலையில்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. இதற்குத் தீர்வு காண எந்த நிறுவனமும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. நிதி நெருக்கடியால் இந்த மின் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம் இந்த சூழ்நிலையை நிர்வகிக்க நாங்கள் அரசுக்கு பரிந்துரைத்தோம்.

அடுத்த சில நாள்கள் பொதுமக்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு மின்சாரம் வழங்கவும் நாங்கள் எங்களால் முடிந்த வரை முயற்சி செய்கிறோம். – எனத் தெரிவித்துள்ளார்.



# மின் பிறப்பாக்கி பழுது சாவகச்சேரி வைத்தியசாலை இருளில்

மின்வெட்டு நேரம் ஆதார வைத்தியசாலையில் பொருத்தப்பட்ட மின்பிறப்பாக்கி பழுது பட்டமையால் வைத்தியசாலை முழுவதும் இருளில் மூழ்கியது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

நாட்டில் நேர அட்டவணையின் பிரகாரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மின் துண்டிப்பு ஏற்பட்ட நிலையில் அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி இயங்க மறுத்ததன் காரணமாக தொலைபேசி வெளிச்சத்தின் மூலம் சேவைகள் இடம்பெற்றுள்ளன.

வடமாகாண சுகாதார சேவைகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில், இவ்வாறு வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கி உரிய முறையில் பராமரிக்கப்படாததன் விளைவே இவ்வாறான தடங்கல்கள் ஏற்படுவதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

# அத்தியாவசியப் பொருள்கள் சதொசவில் பெறமுடியவில்லை

## வவுனியா மக்கள் துயரம்

அவசிய பொருள்களை வாங்குவதாயின் தனியாக வாங்க முடியாது எனவும், மற்றுமொரு பொருளை வாங்கினால் மாத்திரம் அத்தியாவசியப் பொருள்களை வாங்க முடியும் என்ற அறிவிப்பு வவுனியா நெளுக்குளத்தில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வவுனியா நெளுக்குளத்தில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்திற்கு அவசிய பொருள்கள் வாங்குவதற்காக வாடிக்கையாளர் ஒருவர் சென்றுள்ளார். அங்கு சில பொருள்கள் இல்லை.

அந்த நபர் ஒரு கிலோ பருப்பை கொள்வனவு செய்தபோது சதொச விற்பனையாளர்கள் அவ்வாறு ஒரு கிலோ பருப்பை வழங்க முடியாது எனவும் ஒருவருக்கு 500 கிராம் மட்டுமே வழங்க முடியும் எனவும், தனியாக பருப்பை வழங்க முடியாது எனவும் கூறியுள்ளனர்.

பருப்பு வாங்க வேண்டுமாயின் அதனுடன் வேறு பொருள்களைக் கொள்வனவு செய்தால் மட்டுமே வழங்க தமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என கூறியுள்ளனர். மேற்படி விற்பனை நிலையத்தில். பொருள்கள் கொள்வனவு செய்யும் பிரதி ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதில் 16.03.2022 முதல் விற்பனை செய்யும் போது பின்வரும் பொருள்கள் பொதுமக்களுக்கு சமமாக விற்கப்பட வேண்டும் என்பதால், பின்பற்ற வேண்டிய நிபந்தனையாக செயற்பாட்டுப் பிரிவின் மறு அறிவிப்பு வரும் வரை இந்தக் கட்டுப்பாடுகள் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனி (சர்க்கரை) குறியீடு பொருள்களை விற்கும் போது ஒரு வாடிக்கையாளருக்கு விற்கக்கூடிய அதிகபட்ச அளவு ஒரு கிலோ கிராம் ஆகும். பொருள்களை கொள் வனவு செய்யும் போது அதனுடன் மற்றொரு பொருளை (சில்லறை அல்லது மசாலா) வாடிக்கையாளர் வாங்க வேண்டும் என காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

# யாழ். அராலி பகுதியில் வீடு உடைத்து திருட்டு!

யாழ்ப்பாணம் அராலிப் பகுதியில் வீடு ஒன்றை உடைத்து பெறுமதியான கையடக்க தொலைபேசி மற்றும் பணம் என்பவை திருடப்பட்டுள்ளன.

அராலி வடக்கு , செட்டியார் மடம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம், வீட்டின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள், வீட்டில் இருந்த பணம் மற்றும் பெறுமதிவாய்ந்த கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றை திருடி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கனடாவிலும் காரைதீவிலும் நடைபெற்ற விபுலாநந்தரின் 130 ஆவது ஜனன தினம்!

(வி.ரி.சகாதேவராஜா – காரைதீவு நிருபர்)

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130 ஆவது ஜனனதினத்தை முன்னிட்டு தமிழ்கூறு நல்லுலகெங்கும் ஜனனதின விழாக் கொண்டாட்டங்கள் பரவலாக நடைபெற்றன. அவர் பிறந்த மார்ச் 27ஆம் திகதி இலங்கையிலும் புலம்பெயர்தேசங்களிலும் பலவித நிகழ்ச்சிகள் நடந்தேறின.

குறிப்பாக அவர் பிறந்த காரைதீவிலும் கனடாவிலும் இடம்பெற்ற ஜனனதின நிகழ்ச்சிகளை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**காரைதீவில்**

அவர் பிறந்த காரைதீவு மண்ணில் 'ஒஸ்கார்' (AUSFAR) (அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியம்) சுவாமி விபுலாநந்தர் நினைவுப்பேருரையுடன்கூடிய பரிசளிப்புவிழாவை ஞாயிறன்று காரைதீவு விபுலாநந்த மணி மண்டபத்தில் நடத்தினர்.

சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்ற முன்னாள் தலைவர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் முதன்மை அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் மற்றும் திருமுன்னிலை அதிதியாக இ.கி.மிசன் மட்டு.மாநில மேலாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஜீ மஹராஜ் கலந்து சிறப்பித்தனர்.

'தமிழ்க்கல்வியும் தமிழில் கல்வியும்' என்ற மகுடத்தில்சுவாமிதொடர்பானநினைவுப்பேருரையை கிழக்கு பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் சி.மௌனகுரு காணொலி மூலம் நிகழ்த்தினார். கௌரவ அதிதிகளாக காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், பிரதேசசெயலாளர் சிவ. ஜெகராஜன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் சிறப்பு அதிதிகளாக பணிமன்ற தலைவர் வி.ஜெயநாதன், கோட்டக் கல்வி பணிப்பாளர் ஜே.டேவிட், ஆலய ஒன்றிய தலைவர் இ.குணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'மீன்மகள் பாடுகிறாள் வாவி மகள் ஆடுகிறாள்' என்ற அருமையான பாடல் லோ.வித்யாசினியின் நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளும் மேடையேறின.

சுவாமியின் 130 ஆவது ஜனனதினத்தையொட்டி ஒஸ்கார் அமைப்பினர் ஏலவே காரைதீவுக்கோட்டத்திலுள்ள தமிழ் முஸ்லிம் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, சித்திரம், பாவோதல் ஆகிய தமிழ் இலக்கிய ஆக்கத்திறன் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தியிருந்தனர். போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பெறுமதிமிக்க பணப்பரிசுகள் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

முதலாம் பரிசுபெற்ற மாணவருக்கு 2000 ரூபாவும் நினைவுச்சின்னமும் 2 ஆம் 3 ஆம் இடம்பெற்ற மாணவர்க்குமுறையே 1500 ரூபா 100 ரூபா பணப்பரிசும் நினைவுச்சின்னமும் வழங்கிவைக்கப்பட்டன. ஒஸ்கார் பிரதேசக்குழுவின் உறுப்பினர்களான லோ.ஹிருஷாலினி வரவேற்புரை வழங்க வை.சத்தியமாறன் நன்றியுரை வழங்கினார்.

இதற்காக ஒத்துழைத்த ஒஸ்கார் சர்வதேச இலங்கை மற்றும் காரைதீவு குழுவினருக்கு நன்றிகள் என ஆஸ்திரேலியாவிலிருந்து ஒஸ்கார் செயலாளர் அ.மகேந்திரன்(கட்டடக்கலை நிபுணர்) தெரிவித்தார்.

**கனடாவில்**

கனடா சுவாமி விபுலானந்தர் கலை மன்றம் கனடா ஸ்காபுறோ நகரில் விபுலானந்த அடிகளாரின் 130 ஆவது பிறந்த நாளை அமைப்பின் தலைவர் எல். புருஷோத்தமன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொண்டாடியது.

கனடாவில் நடைபெற்ற சுவாமி விபுலாநந்தரின் 130 ஆவது ஜனனதினவிழாவில் இந்தியா காசியிலிருந்து மெய்நிகர் இணையவழி மூலம் பேசிய இ.கி.மிசனின் மட்டு.மாநில உதவிமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் தெரிவிக்கையில் –

சுவாமி விபுலானந்தர் அவர்களை 'முத்தமிழ் அறிஞர்' என்ற வட்டத்துக்குள் அடக்கி விடமுடியாது. அவரது இளவயதிலிருந்தே இறைவனின் ஆசியும் அருளும் பெற்ற ஒருவராக வாழ்ந்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் –

அவர் விரும்பிய போதெல்லாம் அவருக்குத் தேவையான பொருள்களை அவரை அறியாதவர்கள் பலர் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். உதாரணமாக சில புத்தகங்களை அவர் வாசிக்க விரும்பிய போது அவை விபுலானந்தர் அடிகளாருக்கு எவ்விததடையுமின்றி கிடைத்துள்ளன.

எனவே அந்த மகானின் 130 ஆவது பிறந்த நாளை உலகெங்கும் பலநாடுகளிலிருந்தும் அவரை மரியாதை செய்து நேசிப்பவர்களாகிய நாம் கொண்டாடி மகிழ்கின்றோம். – என்றார்.

சுவாமி விபுலானந்தர் கலை மன்றம் – கனடா அமைப்பின் தலைவர் எல். புருஷோத்தமன் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவை மன்றத்தின் செயலாளர் நித்தி சிவானந்தராஜா சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். கோணேஸ் – கீதா தம்பதியினர் மங்கல விளக்கேற்றினர். த விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை சுதன் பத்மநாதன் ஆகிய இருவரும் விபுலானந்தர் அடிகளாரின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்கள்.

சங்கீத பூசணம் திருமதி குலநாயகி விவேகானந்தன் விபுலானந்தர் அடிகளாரின் புகழ்பாடும் பாடல்களை இசையோடு பாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

தொடர்ந்து கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம். மா. நல்லரத்தினம். சட்டத்தரணி சாம் தில்லையா ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றினார்கள்.

தொடர்ந்து அமெரிக்கா வாழ் வைத்தியர் தமிழ்ச் செல்வி முருகேசன் சிறப்புரையாற்றி சபையோரை மகிழ்வித்தனர். அவரைத் தொடர்ந்து கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் சிறப்புரையாற்றினார். கவிஞர் குமரகுரு நன்றியுரையாற்றினார்.

## இன்று 13மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுகளில் காலை 3 மணி முதல் 6 மணி வரை, மதியம் 12 மணி முதல் 4 மணி வரை, மாலை 6 மணி முதல் 12 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

G, H, I, J, K, L ஆகிய பிரிவுகளில் காலை 12 மணி முதல் 3 மணி வரை காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

P, Q, R, S ஆகிய பிரிவுகளில் காலை 3 மணி முதல் 6 மணி வரை, மதியம் 12 மணி முதல் 4 மணி வரை, மாலை 6 மணி முதல் 12 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

T, U, V, W ஆகிய பிரிவுகளில் காலை 12 மணி முதல் 3 மணி வரை, காலை 8 மணி முதல் 12 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

M, N, O, X, Y, Z ஆகிய பிரிவுகளில் காலை 5.30 முதல் 9 மணி வரை, மாலை 4 மணி முதல் 6 மணி வரை மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

## நாடு இருளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு தழுவிய ரீதியில் இன்று சுழற்சி முறையில் 13 மணித்தியாலங்கள் மின்விநியோகத் தடை அமுல்படுத்தபட்டுள்ளது. அதேவேளை, நாளை முதல் 15 மணித்தியாலங்கள் மின்விநியோகத் தடையை அமுல்படுத்தும் சாத்தியம் அதிகம் காணப்படுகின்றது. இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடு வரலாறு காணாத நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இதற்கு இந்த அரசே முழுப்பொறுப்பு.

தற்போதைய எரிசக்தி நெருக்கடிக்கு தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் சார்ந்த தீர்வுகள் குறித்து நாம் பல தரப்புடனும் கலந்தாலோசித்து வருகின்றோம்.

இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் இலங்கை மீண்டெழ முடியாது. எனவே, இந்த அரசு கூண்டோடு பதவி விலக வேண்டும். அப்போதுதான் ஆட்சியை நாம் பொறுப்பேற்க முடியும்.

எங்கள் கைகளில் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வோம் – என்றார்.

## நெருக்கடியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தட்டுப்பாடு காரணமாக மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதோடு, மின்வெட்டு காரணமாக வர்த்தக நடவடிக்கைகளை முறையாக முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல தொழில்துறைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், சில நாள்களேனும் நாட்டை முழுமையாக மூடிவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு உயர்மட்டங்களில் இருந்து அரசிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## இலங்கைக்கு விரைந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலை செய்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில், சாதாரண வேகத்தில் விடயங்களை செய்து முடிக்க முடியாது. தேவைகள் அவசரமானவை. எல்லாவற்றையும் வேகமாகக் கண்காணிக்க வேண்டும். எனவேதான் இந்தியா கூடுதல் நேரம் வேலை செய்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த அவர், தனது பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பத் தயாராக இருந்த நிலையில், இந்தக் கருத்தை வெளிப்படுத்தினார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

இலங்கையின் நெருக்கடியில் (உதவுவதில்) சிறந்த அண்டை நாடாக இந்தியா செயற்படுவாதகவும், அதேநேரம் அரசியல் நிலைப்பாடுகளைத் தள்ளி வைத்து–விட்டு இந்த நெருக்கடியான சூழலில் இந்தியா உதவுவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்காக சமீபத்தில் இறுதி செய்யப்பட்ட 1 பில்லியன் டொலர் கடன் திட்டம் மிக விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என்றும் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்..

400 மில்லியன் டொலர் நாணய பரிமாற்றம், 500 மில்லியன் டொலர் கடன் ஒத்திவைப்பு, எரிபொருளுக்கான 500 மில்லியன் டொலர் கடன் மற்றும் ஒரு பில்லியன் டொலர் கடன் உதவி என்பவற்றை புதுடில்லி இந்த ஆண்டு இலங்கைக்கு வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அபிவிருத்தி ஆகிய நான்கு விடயங்கள் இலங்கை ஜனாதிபதிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது இரு தரப்பினரும் குறிப்பிட்ட, செயற்படக்கூடிய புள்ளிகளை அடையாளம் கண்டு அவற்றில் இணக்கம் கண்டுள்ளனர் என்றும் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

எனினும் அந்தக் கலந்துரையாடல. இன்னும் பூர்த்தியடைந்து விடவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## புதுக்குடியிருப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேச சபை ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் ஏ – 9 வீதியில் இடம்பெற்றுள்ளது.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கழிவகற்றும் உழவு இயந்திரத்தின் பின் பகுதியில் அதே திசையில் பயணித்த சொகுசு பஸ் மோதியுள்ளது.

இந்த விபத்தில் உழவு இயந்திரம் பலத்த சேதங்களுக்குள்ளாகி தடம்புரண்டுள்ளது.

இதன்போது உழவு இயந்திரத்தைச் செலுத்திய சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்தமையுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மணவாளன்பட்டமுறிப்புப் பகுதியைச் சேர்த்த 35 வயதுடைய ஜெயராம் பிரசாத் என்ற இளம் குடும்பத்தரே சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் சாரதியாகப் பணிக்கமர்த்தப்பட்டிருந்தவர். அதேவேளை படுகாயமடைந்த மற்றைய மூவரும் சுகாதார சிற்றூழியர்களாவர்.

படுகாயமடைந்த மூவரும் அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்தவரின் உடல் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொல்லங்கலட்டியில் நேற்று பகல்வேளையில் நகை திருட்டு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 31

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியில் நேற்றைய தினம் பகல்வேளையில் வீட்டார் வெளியில சென்ற சமயம் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் 7 பவுண் நகையைக் களவாடிச் சென்றுள்ளனர்.

வீட்டுக்காரரான தெல்லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத்தர் பணிக்காக அலுவலகம் சென்றிருந்தார். ஏனையோரும் பணி நிமித்தம் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளனர்.

இவற்றை அவதானித்த திருடர்கள் வீட்டிற்குள உட்புகுந்து வீட்டில் இருந்த 7 பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றை களவாடிச் சென்றுள்ளனர்.

## திடீர் சுகவீனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், கீரிமலை – கூவில் பகுதியைச்சேர்ந்தவரும், கெப்பற்றிக்கொலாவ குடும்பநல உத்தியோகஸ்தருமான கந்தசாமி நிதர்சினி (வயது 27) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கெப்பற்றிக்கொலாவையில் பணியாற்றி வந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீர் சுகவீனம் காரணமாக கீரிமலையில் உள்ள தனது வீட்டுக்கு அவர் திரும்பியுள்ளார்.

இந்நிலையில், கடந்த 26ஆம் திகதி உடல் நிலை மோசமானதை அடுத்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

மறுநாள் 27ஆம் திகதி அவர் மயக்க நிலைக்கு சென்றமையை அடுத்து , மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவரது மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடல் கூற்று மாதிரிகள் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## இந்திய - இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் மேலும் கூறப்பட்டவை வருமாறு :–

இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்படும் மிதக்கும் தளமானது ஆண்டு தோறும் கப்பல் பழுதுபார்ப்பு வேலைகளுக்கு வெளியாருக்கு கொடுக்கப்படும் 60 கோடி ரூபா செலவை மீதப்படுத்தக் கூடியதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டமானது 2015ஆம் ஆண்டு முதல் வரைவில் இருந்து வருகின்ற ஒன்றாகும்.

டோர்னியர் உளவு விமானமானது அடிப்படையில் கடல்சார் கண்காணிப்பு, தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காகவும், தேவையான பல்வேறு தளங்களுக்கு தகவல்களை வழங்குவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த வசதி இன்மையே கடந்த இரண்டு வருட காலமாக இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் இருதரப்பு உரையாடல்களுக்கான காரணமாக அமைந்ததுடன் இலங்கைக்கு ஒரு டோர்னியர் உளவு விமானத்தை இலவசமாக வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இதற்கமைய, மேற்படி விமானம் உற்பத்தி செய்யப்படும் வரை அதேபோன்ற ஒரு விமானத்தை இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கும். இலங்கை விமானப்படையின் விமானிகளாலேயே இந்த விமானம் இயக்கப்படவுள்ளதுடன், இவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதற்காக இந்தியப் பயிற்சிக்குழு ஒன்று இலங்கையில் தங்கியிருக்கும். இதன் காரணமாக இலங்கை விமானப் படையினர் மேற்படி விமானத்தை செலுத்தத் தேவையான மேலதிக திறனை பெற்றுக் கொள்ளவர். அதேவேளை, இந்த ஒப்பந்தங்கள் நாட்டின் கடல்சார் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த உதவியாக அமைவதுடன், பாரிய செலவையும் குறைக்க உதவியாக அமையவுள்ளன.

மேலும், இந்திய அரசாங்கத்தின் 6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் கொழும்பில் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (எம்.ஆர்.சி.சி.) ஒன்றை நிறுவுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பாதிப்புக்குள்ளான கப்பல்களின் பாதுகாப்பை சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைய உறுதிப்படுத்தவும், இப்பிராந்தியத்தினுள் பாதிப்புக்குள்ளான கப்பல்கள் தொடர்பான தேடுதல் மற்றும் மீட்பு பணிகளுக்கும் இந்த மையமானது மிகவும் அவசியமானதாகும்.

இந்த நாட்டைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியத்தின் ஊடாக செல்லும் வணிகக் கப்பல்கள் தொடர்பில் கடல்சார் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பு இலங்கை கடற்படையைச் சாரும்.

சர்வதேச கடல்சார் அமைப்பின் உத்தியோகபூர்வ பிரதிநிதியாக செயற்படும் வணிகக் கப்பல் செயலகம், வணிகக் கப்பல்களுக்கான கடல்சார் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கான பொறுப்பை இலங்கைக் கடற்படைக்கு வழங்கியுள்ளது. கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் தனது கடல்சார் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைக்கான பொறுப்பை 17 லட்சத்து78 ஆயிரத்து 062.24 சதுர கிலோ மீற்றர் பரப்பிற்குள் கொண்டுள்ளது. இது இலங்கையின் நிலப்பரப்பை விட சுமார் 27 மடங்கு விசாலமானதாகும். இத்திட்டத்தின் முதன்மை பங்குதாரரான இலங்கை கடற்படை ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும். இந்தத் திட்டத்திற்கான அமைச்சரவைப் பத்திரம் 2017ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சினால் முதலில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட மூன்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர், பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் உட்பட சம்பந்தப்பட்ட ஏனைய அரச நிறுவனங்களுக்கு உரிய முறையில் அனுப்பி அதற்கான உரிய நடைமுறைகளையும் பின்பற்றியுள்ளது.

எனவே, உட்கட்டமைப்பு மற்றும் ஆளணி மேம்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய பொருளாதார மற்றும் பாதுகாப்பு நன்மைகளைத் தவிர, ஒரு இறையாண்மையுள்ள நாடான இலங்கையின் தேசியப் பாதுகாப்பிற்கு எந்த விதமான ஆபத்தும் ஏற்படாது என பாதுகாப்பு அமைச்சு உறுதியளிக்கிறது. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் 'ஹரித தெயக்' தேசிய வீட்டுத்தோட்ட திட்டம்



முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 22 லட்சம் வீட்டுத் தோட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் 'ஹரித தெயக்' தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய நீலச் சேனை கிராமத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசு அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நாற்றுகள் மற்றும் விதைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் அந்தக் கிராமத்தில் உள்ள வீடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வீட்டுத்தோட்டச் செய்கையையும் அதிகாரிகள் பார்வையிட்டதோடு, மேற்படி செய்கையை ஊக்குவிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பயனாளர்களுடன் கலந்துரையாடிய உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பண்டாரவளையில் எதிர்ப்பு போக்குவரத்து இடையூறு!

பண்டாரவளையில் நேற்று புதன்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாக பண்டாரவளை - பதுளை வீதியூடான போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் கொள்வனவிற்காக வந்தவர்களே இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் பலர் கைது!

மட்டக்களப்பு - பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் ஹெரொயின் போதைப்பொருளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 50 மில்லிகிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் 25 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் காத்தான்குடியிலிருந்து கருவப்பங்கேணி பிரதேசத்துக்கு முச்சக்கரவண்டியில் கேரளா கஞ்சாவைக் கடத்திச் சென்று விற்பனையில் ஈடுபட்ட இருவரை 90 கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்துள்ளது என மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவினருடன் மாவட்ட புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து சம்பவதினமான கடந்த செவ்வாய்க்கிழமை பகல் 12 மணியளவில் குறித்த பகுதியில் உள்ள வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இதன்போது ஓட்டோ ஒன்றில் கேரளா கஞ்சாவை வியாபாரத்துக்கு எடுத்து வந்த இருவரையும் மடக்கிப் பிடித்து கைது செய்தமையுடன், அவர்களிடமிருந்து 90 கிராம் கேரளா கஞ்சாவையும் ஓட்டோ ஒன்றையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழடித்தீவு மற்றும் வீட்டுத்திட்டப் பகுதியைச் சேர்ந்த 46, 37 வயதுடையவர்கள் எனவும் காத்தான்குடி கர்ப்பலாப் பகுதியிலிருந்து கஞ்சாவை வாங்கிக்கொண்டு கருவப்பங்கேணி பிரதேசத்தில் விற்பனைக்கு எடுத்துச் சென்றனர் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் இவர்களை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு - சந்திவெளி பிரதேசத்துக்கு பஸ்ஸில் கஞ்சாவைக் கடத்தி வந்து அதனை சந்திவெளி பகுதியிலுள்ள பற்றை காட்டுப் பகுதியில் விற்பனைக்காகப் பொதி செய்து கொண்டிருந்த நால்வரை 165 கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக சந்திவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான கடந்த செவ்வாய் மாலை குறித்த பற்றை காட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன் போது கேரளா கஞ்சாவை விற்பனைக்காகப் பொதி செய்து கொண்டிருந்த நால்வரை 165 கிராம் கேரளா கஞ்சாவுடன் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் பளை இத்தாவில் பகுதியைச் சேர்ந்த 29,24,24,25 வயதுடையவர்கள் எனவும் இதில் ஒருவர் மட்டு கல்குடா பிரதேசத்தில் திருமணம் முடித்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இவர்களை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இதயம், சிறுநீரகம், புற்று நோயாளர்களுக்குப் பயன்படும் மருந்துகளுக்கு வைத்தியசாலைகளில் பாரிய தட்டுப்பாடு?

நாடளாவிய ரீதியிலுள்ள பல வைத்தியசாலைகளில் இதயம், சிறுநீரகம் மற்றும் புற்று நோயாளர்களுக்காகப் பயன்படுத்தப்படும் அதிகளவான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருந்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அதிகளவான ஏனைய மருந்துகள் தீர்ந்துவிடும் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சத்திரசிகிச்சையை ஒத்தி வைக்க எடுக்கப்பட்ட தீர்மானம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என பேராதனை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அர்ஜுன திலகரத்ன தெரிவித்துள்ளார்.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தட்டுப்பாடு காரணமாக பேராதனை வைத்தியசாலையில் திட்டமிடப்பட்ட சத்திரசிகிச்சை கடந்த செவ்வாய்க்கிழமை சில மணித்தியாலங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்களை வழங்குவதாக மருத்துவ வழங்கல் பிரிவு தெரிவித்ததை அடுத்து, சத்திரசிகிச்சை வழமை போன்று ஆரம்பிக்கப்பட்டது என பேராதனை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# உரும்பிராயில் கோப்பாய் பொலிஸார் மீது தாக்குதல்; குற்றச்சாட்டில் இரு பெண்கள் உள்ளிட்ட ஐவர் கைது

நீதிமன்ற பிடிவிறாந்தை நடைமுறைப்படுத்த சென்ற இரு பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றத்தில் 2 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யோகபுரம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு செல்லாதமையால் நீதிமன்றால் அவர்களுக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட பிடிவிறாந்தை நடைமுறைப்படுத்தி அவர்களைக் கைது செய்வதற்காக இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்த்தர்கள் செவ்வாய்க்கிழமை யோகபுரம் பகுதிக்குச் சென்று இருந்தனர்.

அதன் போது அங்கு நின்றவர்கள் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமையுடன், பொலிஸார் மீது தாக்குதலையும் மேற்கொண்டனர்.

சம்பவம்தொடர்பில்மேலதிகநடவடிக்கையை முன்னெடுத்த பொலிஸார், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இரு பெண்கள் உள்ளிட்ட ஐவரைக் கைது செய்தனர்.

# வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலையில் சிறப்புச்சொற்பொழிவு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் - மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' கனடா ரொன்ரோவை வதிவிடமாகக்கொண்ட சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணையுடன் சமயஜோதி திரு. கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தொடர் பதின்மூன்றாவது சொற்பொழிவு நிகழ்வு வல்வெட்டித்துறை வேவில் வீரகத்தி விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலையில், நாளை (வெள்ளிக்கிழமை) பி.ப.3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, 'நாவலர் பெருமானின் கல்விப்பணி என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.த.குமரனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கானப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

# 6 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை ஐ.ஓ.சியிடம் கொள்வனவுக்கு முடிவு!

லங்கா ஐ.ஓ.சியிடமிருந்து 6 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்திய கடன் எல்லை வசதியின் கீழ், இலங்கைக்கு டீசல் கிடைக்கும் வரை இவ்வாறு கொள்வனவு செய்யப்படவுள்ளது என வலுசக்தி அமைச்சர் காமினி தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகள் மற்றும் மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காகவே இவ்வாறு டீசல் கொள்வனவு செய்யப்படுகின்றது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கடன் எல்லை வசதியின் கீழ் டீசல் உடன் வருகை தரும் கப்பல் இன்று (வியாழக்கிழமை) இலங்கையை வந்தடையும் வரை மேற்படி நடவடிக்கைகளுக்காக இந்த டீசல் தொகை கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2022இல் வெளியிடப்பெற்றது.